# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.18/15

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் நாள் வியாழன் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 சாகித் ராமன் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.ஆர்.யமுனாதேவி, பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 4வது பிரதிவாதி தரப்பில்**

4ம் பிரதிவாதியை இவ்வழக்கில் வழக்கு சொத்தில் வாடகைதாரர் என்ற அடிப்படையில் தான் தரப்பினராக சேர்த்தேன் என்றால் சரி. வழக்கு சொத்தில் எனக்கும் தற்போது 1ம் பிரதிவாதிக்கும் தலா பாதி பாகம் சொத்தில் கிடைத்தால் என்னுடைய பாகத்தில் 4ம் பிரதிவாதி வாடகைக்கு உள்ள இடம் ஒதுக்கபட்டால் அவரை என்னுடைய வாடகைதாரராக ஏற்று கொள்ள எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. 4ம் பிரதிவாதி என் அப்பாவிடம் தான் வாடகைதாரராக வந்தார் என்றால் சரி.